# SRI MANICKA VINAYAKAR ALAYAM - PARIS

FOUNDED ON 04. 02. 1985

72, RUE PHILIPPE DE GIRARD, 75018 - PARIS, FRANCE

**Tel.: 01 40 34 21 89 / 01 42 09 50 45 Fax.: 01 40 34 33 34**

Website : http://www.templeganesh.fr - Email – srimanicka@yahoo.fr


"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



The Chief Editor,

# பாரிஸ் மாநகரில்

## 40ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்களின் பக்திவெள்ளத்தில் 13வது தடவையாக பஞ்சமுகவிநாயகர் – ஸ்ரீ முருகப்பெருமான் தேர்பவனி (31. 8. 2008)

பிரான்ஸில் சரித்திரம்முக்கியத்துவம்வாய்ந்த நிகழ்வுகளில் ஒன்றாகவும் இந்துக்கள் பெருமைப்படும் விழாவாகவும் பாரிஸ் ஸ்ரீ மாணிக்கவிநாயகரின் தேர்த்திருவிழா விளங்குகிறது.

ஸ்ரீ மாணிக்க பஞ்சமுகவிநாயகப்பெருமான், வள்ளி, தெய்வானை சமேத முருகப்பெருமான் சகிதம் அழகிய இருதேர்களில் பாரிஸ் மாநகர வீதிகளில் 13வது தடவையாக 31.08.2008 ஞாயிற்றுக்கிழமை பவனிவந்தார்.

பிரான்சின் புறநகர் பகுதிகளிலிருந்தும், ஐரோப்பாவின் ஏனைய நாடுகளிலிருந்தும் பல்லினதேசத்தவரும் தேர்த்திருவிழாவில் கலந்து கொண்டனர். இலங்கை, இந்திய துாதராலயங்களைச்சேர்ந்த முக்கியபிரமுகர்களும் இத்தேர்பவனியில் கலந்து ஆதரவு நல்கினர்.

இத்தேர்பவனியை சகலபிரெஞ்சுத் தொலைக்காட்சிகள் (TV) மற்றும் செய்தி ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரம் செய்தன. பிரான்ஸிலிருந்து வெளிவரும் பிரெஞ்சுசெய்திஊடகங்கள் 40ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டதாக வியந்து எழுதியிருந்தது. உலகின் வேறுபல நாடுகளின் தொலைக்காட்சிசேவைகளும் பாரிஸ் தேர்த்திருவிழாவிற்கு முக்கியத்துவம் கொடுத்து ஒளிபரப்புச் செய்திருந்தன. குறிப்பாக இந்தியாவின் பலமாநிலங்களிலும், பலவேறுமொழிகளிலும் மற்றும் ஐரேப்பிய அமெரிக்க நாட்டுதொலைக்காட்சிகளும் பாரிஸ் தோத்திருவிழாவுக்கு முன்னுரிமை அளித்திருந்தன. TF1, M6, France3, France2, Antenne1, ChannelPlus, Cable R.F.O., CNN, KTO போன்ற தொலைக்காட்சிகள் குறிப்பிடத்தக்கவை.அந்தந்த நாடுகளில் தொலைக்காட்சிகளில் பார்த்தவர்கள் பாரிசிலுள்ள தமது உறவினர்களுடன் ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் பரிமாறிக்கொண்டனர். பலவானொலி நிலையங்கள் குறிப்பாக றேடியோ பிரான்ஸ் 4 மணிநேர தேர்த்திருவிழா நிகழ்ச்சியை நேரடிஅஞ்சல் செய்தன. பல்லாயிரக்கணக்கான மக்கள் புலம்பெயர் மண்ணில் மாபெரும் தமிழர் கலாச்சார நிகழ்வாக கொண்டாடி மகிழ, பல லட்சம் மக்கள் கண்டும், கேட்டும் சிறப்புற்றனர்.

வழமைபோல் வீதிமருங்கும், வர்த்தகர்களும், பக்ததர்களும் வீதியை சுத்தம் செய்து மாவிலை தோரணங்களால் அலங்கரித்து பக்தர்களுக்கு சிற்றுண்டி வகைகள் மற்றும் தாகசாந்தி வழங்கி சிறப்பித்தனர். தேர்பவனியின் போது பல ஆயிரக்கணக்கான தேங்காய்கள் சிதறிஅடிக்கப்பட்டதை முக்கியமாக வேறுநாட்டவர்கள் ஆச்சரியத்தோடு பார்த்து மகிழ்ந்தனர். அவர்கள் தென்னந்திருவிழாவாகவும் வருணித்ததை பிரெஞ்சுப்பத்திரிகைகள் வெளிக்காட்டின.

பகல் 11.00 மணியிருந்து பிற்பகல் 3.00 மணிவரை 4 மணிநேரம் பாரிஸின் குறிப்பிட்ட பிரதான வீதிகளில் பஸ்வண்டிகள் வராது முன்கூட்டியே நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. வழமையை இவ்வருடம் அதிகளவிலான வீதிகள் தடைசெய்யப்பட்டு ஸ்ரீமாணிக்கவிநாயகரின் தேர்த்திருவிழாவிற்கு பிரெஞ்சு காவற்றுறை பூரண ஒத்துழைப்பை வழங்கியது.

மேளதாளங்கள், ஆண்கள், பெண்களின் காவடிகள், கற்பூரச்சட்டிகள் என பக்திசிரத்தையுடனான பக்தர்களின் நேர்த்திகள் தேர்பவனியை மேலும் அழகுறச்செய்தன.

பிரான்ஸ் நாட்டில் இவ்வாறான ஒரு வராற்றுச்சிறப்புமிக்க நாளுக்காக, மக்கள் ஆவலோடுகாத்திருப்பது மாணிக்க விநாயகப்பெருமானின் கருணையே .

**பி.கு : இத்துடன் தேர்த்திருவிழா புகைப்படங்களும் இணைத்துள்ளோம்.**

**(எமது இணையத்திலும் பெற்றுக்கொள்ளலாம் - www.templeganesh.fr)**